# ஜெனரல் அவர்களின் கிறிஸ்து பிறப்பு செய்தி - 2023
# General's Christmas message - 2023

அந்தக் காட்சி பிரபலமான ஒன்று. பண்டிகை விளக்குகள் மற்றும் அலங்காரங்கள், இசை வாசித்தல் மற்றும் திரளான மக்கள் நகர்ந்துக்கொண்டு இருத்தல், கிறிஸ்து பிறப்பு விவரங்கள் அனைத்தும் குறிப்பெடுத்துக் கொள்ளுதல் போன்றவற்றால் ஒரு தெரு முழுவதும் நிறைந்திருந்தது. அந்த தெருவின் கடைசியில் இருந்த இல்லம் இருளில் இருந்தது. அவ்வீட்டின் முன் இருந்த புல்வெளியில் பிறப்பின் காட்சியைக் கொண்ட ஒரு சிறிய பெட்டி இருந்தது. பெரும்பாலானோர் அதைச் சரிசெய்ய முன்வரவில்லை. அவர்கள் அந்த வீட்டை அடைவதற்குள் கிறிஸ்து பிறப்பு காட்சி முடிந்து விட்டதாக மிக எளிமையாகக் கருதப்பட்டது. ஆனால், அங்கிருந்தவர்களின் இருதயத்தில் கிறிஸ்து பிறப்பின் அமைதியான காட்சி வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. அது ஒளிரும் காட்சி அல்ல. அங்கு அதிகமான விளக்குகளோ, ஒலிகள் மற்றும் எந்தவித சத்தமோ இல்லை. ஆனால் ஒருவர் இரட்சகராக பிறந்திருக்கிறார் என்பதில் கொஞ்சம் அமைதியாக கவனம் செலுத்தப்பட்டது.

அமைதியான மனநிலையில் கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டத்தை நாம் தவறவிடுகிறது எளிதானதா என்று நான் சில நேரங்களில் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். நாம் சில கிறிஸ்து பிறப்பின் சம்பவங்களை கவனிக்கும் போது கூட அதன் மையச் செய்தியை நாம் அனைவரும் தவற விட்டு விட நேரிடலாம். சுவிசேஷங்களின் எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்து பிறப்பை வெவ்வேறு விதத்தில் முன்வைக்கின்றனர். மத்தேயு மற்றும் லூக்கா மட்டுமே கிறிஸ்து பிறப்பின் கதையை உள்ளடக்கியுள்ளனர் என்று சிலர் கூறலாம். ஆனால் ஒவ்வொரு சுவிசேஷமும் கிறிஸ்து பிறப்பின் அர்த்தத்தையும் அதன் சொந்த சிறப்பையும் வலியுறுத்திக் காட்டுகின்றன என்பதை நான் உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாற்கு - நற்செய்திகளில் மிகவும் பழமையானது – அதில் பிறப்பு அல்லது குழந்தைப் பருவக் கதைகள் எதுவும் சொல்லப்படவில்லை. மாறாக, மாற்கு சுவிசேஷத்தில் 'கிறிஸ்து பிறப்பின்' ஆரம்ப வார்த்தைகள் அங்கு பொதிந்து வைக்கப்பட்டுள்ளது. 'தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் ஆரம்பம்' (மாற்கு 1:1 புதிய கிங் ஜேம்ஸ் பதிப்பு). இயேசு தொடக்கத்திலிருந்தே தேவனுடைய குமாரனாகவே வெளிப்படுத்தப்படுகிறார். இது ஒரு நல்ல செய்தியாகும்.

யோவானுக்கு எழுதிய சுவிசேஷமும் பிறப்பு அல்லது குழந்தைப் பருவக் கதைகளைக் கொண்டிருக்கவில்லை, ஆனால் கிறிஸ்து பிறப்பின் நடுநிலை செய்தியாக தேவனுடைய இருதயத்தில் வாசம்பண்ணும் கருத்தை எடுத்துக் காட்டுகிறார். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்.

மத்தேயு - இயேசுவின் வம்சம் என்னும் குடும்ப மரத்தில் நீண்ட பெயர் பட்டியலுடன் தொடங்குகிறதை இங்கு காணமுடிகிறது. இதைத் தவிர்ப்பது மற்றும் அதன் முக்கியத்துவத்தை இழப்பது என்பது எளிது. ஆனால் சமூகம் அவர்களுக்கு கடுமையானத் தீர்ப்பளித்திருந்தாலும், குறிப்பிடத்தக்க விசுவாசத்தை வெளிப்படுத்திய ஐந்து பெண்களும் அதில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தாமார் - மாமனாரை ஏமாற்றி கர்ப்பம் தரித்தவர்; ராகாப் - இஸ்ரவேலர் வேவுபார்க்க உதவிய ஒரு விபச்சாரி; ரூத் - இழிவான

வெளிநாட்டவர்; பத்சேபாள் - ஒரு விபச்சாரி மற்றும் மரியாள் - திருமணமாகாத தாய். ஒவ்வொன்றும் இயேசுவின் குடும்ப வரலாற்றின் ஒரு பகுதியாகும். இயேசு பின்னர் பாவிகளுடன் அடையாளம் காட்டப்பட்டால், அது அவருடைய மரபணுக்களில் இருப்பதால் தான் என்பதும், பாவம் மற்றும் பலவீனமான மனிதாபிமானம் இருந்த போதிலும் - விசுவாசத்தைக் காட்டும் நம்மைப் போன்ற மக்களுடன் இயேசு இணைக்கப்பட்டுள்ளார் என மத்தேயுவும், பின்னர் இயேசு இம்மானுவேல் - தேவன் நம்மோடிருக்கிறார், நமது மனித நேயத்துடன் தொடர்பை ஏற்படுத்துகிறார். பாரம்பரிய கிறிஸ்து பிறப்பு கதாபாத்திரங்களான சாஸ்திரிகள் தோன்றுவதற்கு முன்பே இவை அனைத்தும் நடக்கும். எனவே ராஜாவாகப் பிறந்திருக்கிறவரை அவர்கள் தேடி வந்தார்கள்.

லூக்கா, இயேசுவே ஆண்டவர், தேவதூதர்கள் இயேசுவே இரட்சகர் என்று அறிவிக்கிறார்கள். இது நீங்கள் எதிர்பார்க்கும் நபர்களுக்கு வழங்கப்படுவதில்லை, மாறாக மேய்ப்பர்களுக்கு – இது அவர்களின் வேலையின் தன்மையின் காரணமாக பெரும்பாலும் மதத்தை புறக்கணிப்பதாக கருதப்படுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கும், சமுதாயத்தின் விளிம்பில் வாழ்பவர்களுக்கும், இயேசு இரட்சகராக வருகிறார் என கூறுகிறார்.

ஒவ்வொரு நற்செய்திகளும் கிறிஸ்து பிறப்பு பற்றிய வித்தியாசமான பார்வையை முன்வைக்கின்றது. கிறிஸ்து பிறப்பு கதையின் பொறிகளுடன் நாம் ஈடுபடுவது எளிது. எந்த சுவிசேஷத்திலும் குறிப்பிடப்படாத, நமக்குப் தெரிந்த விஷயங்கள் இதில் இருக்கலாம். மாறாக சில சமயங்களில் வேதாகமத்தில் தொடர்புடைய கிறிஸ்து பிறப்பினால் அமைதியான மனநிலையை நாம் அடையமுடியும்.

இந்த வருடம், இயேசுவின் வருகையைப் பற்றி சுவிசேஷங்கள் உண்மையில் என்ன சொல்கிறது என்பதில் நாம் மீண்டும் கவனம் செலுத்தலாம். பாவம் செய்பவர்களுக்காகவும், புறக்கணிக்கப்பட்டவர்களுக்காகவும் வருபவர் அவரே, ராஜாவாக வருபவர் அவரே, இம்மானுவேலாக வருபவர் - தேவன் நம்மோடிருக்கிறார். நம் இரட்சகராக வருபவர் அவரே எக்காலத்திலும் நம்மோடு இருப்பவரும் அவரே.

இந்த வருடத்தில் இந்நேரத்தில் நடக்கும் மற்ற எல்லா விஷயங்களுடனும், கிறிஸ்து பிறப்பின் அமைதியான வாழ்வுக்கு நேராக நம் இதயங்களையும் மனதையும் ஒருமுகப்படுத்துவோம். உண்மையாகவே இயேசு யார்? என்பதையும் தேவனுடைய மகனான நித்திய வார்த்தை மாம்சத்தில் வெளிப்பட்டார் என்றும் நம்முடைய ராஜா இம்மானுவேல் என்றும் நம்முடைய இரட்சகர் என்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகவும் பிறந்தவர் என் உள்ளத்திலும் பிறந்தருளும் என்று சொல்லுவோமா!

பாடலாசிரியருடன், ‘ஓ எங்களிடம் வாரும், எங்களுடன் தங்கியிரும், எங்கள் கர்த்தர் இம்மானுவேல்’ என்று சொல்லுவோம்.

இந்த கிறிஸ்து பிறப்பு காலத்திலும் வரும் ஆண்டு முழுவதும் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**லிண்டன் பக்கிங்ஹாம்**
**ஜெனரல்**